உ

சிவமயம்

தனவைசியராகிய,

நாட்டுக்கோட்டை நகரத்தார்

சரித்திரம்.

இஃது

பூங்கொன்றைவேலங்குடிச் சிலாசாசனத்திற்கேற்பத்
துளாவூர் மடத்திலிருந்த புத்தகத்தை, வரிவித்து,

தேவகோட்டை, வீர. லெ.

சிந்நயச்செட்டியார்

பரிசோதித்துவைத்திருந்த பிரதிப்படி

மெ. அரு. அரு. இராமநாதச்செட்டியார்

அள. அரு. ராம அருணாசலச்செட்டியார்

முதலானவர்கள் அநுமதியின்மீது
முன் பதிப்பித்த பிரதிக்கிணங்க,

தஞ்சாவூர்ச் சதாவதானம்,

சுப்பிரமணிய ஐயரால்,

தமது
தேவகோட்டை,
கலாதர அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம்பதிப்பு.
1904.

COPY-RIGHT REGISTERED.

விளம்பரம்.

இந்தப்புத்தகத்தைக் கெவரன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருப்பதால் வேறொருவரும் இது போலாவது, இதில்ஒருபாகத்தையாவது, வார்த்தைகளைமாற்றியாவது, வேறுசில விஷயத்தைச்சேர்த்தாவது அச்சிடக்கூடாது; அச்சிட்டால் சட்டவிரோதமென்பதை யாவரும் அறியக்கடவர்.

இதில் அடங்கிய விஷயங்கள்.

நகரத்தார் சரித்திரம்.
சாதிமுறைமை நியாயங்கள்,
ஒன்பதுகோவில்களும், பிரிவுகளும்.
இசைகுடிமானம்.

30-2

உ
சிவமயம்
மரகதவிநாயகர் துணை.

பழ.மெ.பெரி. மெய்யப்பன்
"மீனாட்சி இல்லம்"
அண்ணாமலை செட்டியார் வீதி
குத்துப்பட்டணம்
காரைக்குடி-1.

மரகதவிநாயகர்.

மரகதவிநாயகர் துதி.

வெண்பா.

மாவாழு மேழுவழிநகரத் தார்க்கென்றுங்
கோவாழுஞ்செல்வக் குலதெய்வ-மாவாழ்
மரகதவி நாயகனை மாமலர் தூய் வாழ்த்த
வரநலவாழ் வெல்லாம் வரும்.

உ

சிவமயம்.

தனவைசியராகிய,

நாட்டுக்கோட்டைநகரத்தார்

சரித்திரம்.

நீர்மலிகடல்சூழ் நிலவுலகத்தில் சீர்மலிசம்புத் தீவத்தின்கண், ஆதியில், நாகநாட்டிலே, சாந்தியா புரியென்னும் நகரத்திலே, சந்திரகுலகோத்திர வைசியர்கள் கோபதீசுவரசுவாமிதெரிசனமும், சதா சிவ குருபீடத்தில் தீட்சாகிரியையும், மரகத்விநாயகர் பூசையும், இரத்தினவியாபாரமும், செய்துகொண்டு மகாயோகபாக்கியசம்பன்னர்களாய், இராசப்பிரசாதமும், மன்னிணைமரியாதையும்பெற்றுச் சிவாகமபுரான சித்தாந்த சைவதீட்சாசம்பன்னர்களாய், விபூதி உருத்திராட்சமாலிகாபரணராய்ச், சிவதருமகுலதருமபரிபாலகராய் வாழுநாளில், அந்நாட்டு அரசன் செய்த கொடுமையால் அவர்கள் கலியுக வருஷம் உாசு-ல், தொண்டைமண்டலத்தில் காஞ்சிபுரத்திற்கு வந்துசேர்ந்தார்கள். அப்பொழுது அந்நாட்டு அரசன், அதனை அறிந்து அவர்களையழைத்துப் பூர்வோத்திரவிஷயமெல்லாம் விசாரித்து "நீங்கள் இங்கேயிருங்கள்" என்றுசொல்லிச் சகல மன்னிணை மரியாதையுந்தந்து க்ஷேத்திர சுவாத்தியமும், தேவாலயமும், மடாலயமும், விட்டுக்கொடுத்துச் சத்திபுரீசுவரர்தெரிசனமும், புஷ்கரநதி யாடலும், அரு

ணகிரி சிவசங்கராசாரியரிடத்தில் தீட்சாகிரியையும் பெற்றுக்கொள்ளும்படி அநுமதிகொடுக்க, அவ்வாறே பெற்றுக் காஞ்சிபுரத்தில் மரகதவிநாயகர்பூசையும், இரத்தினவியாபாரமும், செய்துகொண்டு மகாயோகபாக்கிய சம்பன்னர்களாய்ப் பரம்பரையாய் வாழ்வுற்றிருந்தார்கள்.

பின்பு அந்நகரத்து அரசனாகிய பிரதாபராசன் அநீதியாய் அபராதமுதலிய தெண்டனைகள் விதிக்கத்தொடங்கிய நிமித்தம், கலியுகவருஷம் உதூ௲ஙயஉ, விரோதிகிருது வருஷத்தில் சோளதேசத்துக்கு வந்துசேர்ந்தார்கள். அப்பொழுது அந்தநாட்டில் அரசுபுரிந்திருந்த மநுநீதிச்சோழராசன் அறிந்து அவர்களையழைத்து விசாரிக்க, ஆதிதொடங்கி நடந்த வர்த்தமானமெல்லாஞ்சொல்லித், தெட்சணதேசம்போகவந்தோமென்றார்கள். அதைக்கேட்ட அரசன் "நீங்கள் நம்முடையதேசத்திலேயேயிருங்கள், சகல மன்னிணைமரியாதையுந்தந்து, பிரதான வைசியர்களாகவும், எங்கள் வம்சத்திற்கு மகுடஞ்சூட்டுவதற்காக மகுடவைசியர்களாகவும் வைத்துக்கொள்கிறோம்; காவிரிப்பூம்பட்டினத்தில் வடக்குத்தெருவில், பலவகை வணிகரிருப்பதினால், நீங்கள் மற்ற மூன்றுதெருவிலுங்குடியிருங்கள்" என்றுசொல்லிக் குடியிருக்குநிலைமையும், சிங்கக்கொடியுங்கொடுத்து மாளிகைகளில் தங்கக்கலசம் வைத்துக்கொள்ளும்படிக்கும், ருத்திராபதீசுவரதரிசனமும், காவிரிநதியாடலும், சிதம்பரத்திலுள்ள பதஞ்சலிக்ஷேத்திரத்

தில் ஈசான்யசிவாசாரியரிடத்தில் தீட்சாகிரியை முத லானவையும் பெற்றுக்கொள்ளும்படிக்கும் அநுமதி கொடுத்தான். அவ்வாறேபெற்று மரகதவிநாயகர் பூசைசெய்துகொண்டு எண்ணுயிரங்குடும்பத்தாரும் ராசாபிமானத் துடன், செயமங்கள சோபனமாய், இரத்தினதன மகுடவைசியர்கள் என்று பெயர் பெற்றுச் சைவசமயநெறியில் வழுவாது தடாககோ புரசிவாலய பிரதிட்டையும் குலதருமபரிபாலனமும் செய்துகொண்டுநெடியகாலம்வாழ்வுற்றிருந்தார்கள்

அந்நாளில், சாலிவாகனசகாப்தம் ௫௱கூ௰சு, கலியுகவருஷம் ௩௲௭௱௪௰௫-ல் அந்தநாட்டில் அர சாட்சிசெய்துகொண்டிருந்த பூவந்திச்சோழராசன் தங்கள்குலத்துப்பெண்களைத் துராகிருதமாய்ப் பிடி த்துச் சிறைவைத்ததினால் அந்த வைசியர் எண்ணு யிரங்குடும்பத்தாரும் தங்கள் ஆண்பிள்ளைகளைமட் டும், உபாத்தியாயரா யிருந்த ஆத்துமநாதசாத்திரி யாரிடத்தில் விட்டு எல்லாப்பொருள்களையும் அவர் வசம் ஒப்புவித்துச் சிசுபரிபாலனமும் மரகதவிநாய கர் பூசையும் நடக்கும்படிசெய்து மானத்தைக்காக் கும்பொருட்டுப் பிராணஹானி செய்துகொண்டார் கள்.

பின்பு, மேலத்தெரு ஆறுவழியில் அறுநூறு பிள்ளைகளும், தெற்குத்தெரு நான்குவழியில் நா நூறுபிள்ளைகளும், கீழத்தெரு எழுவழியில், ஐந் நூற்றிரண்டுபிள்ளைகளும், ஆக ஆயிரத்தைந்நூற்றி ரண்டு பிள்ளைகளும், ஆத்துமநாதசாத்திரியாரிடம்

வாழ்ந்துவருநாளில் சாலிவாகன சகாப்தம் சூ௱டு, கலியுக வருஷம், ௩௲ளா௱அ௰௬-ல், பூவந்திச்சோழ மகாராசன் அந்தியகாலத்தில் புத்திரனுன ராசபூஷண சோழராசனுக்குப் பட்டாபிஷேகம் நடத்த வேண்டியதற்காக ஆத்துமநாத சாத்திரியாரிடம் வளர்ந்துகொண்டிருக்கிற வைசிய குமாரர்களை வரவழைத்து நீங்கள் நமதுகுமாரனுக்கு வழக்கப்படி கிரீடம் சூட்டவேண்டும்என்றுசொல்லப் பிள்ளைகள் அரசனைநோக்கி நீங்கள் கிட்டேரஞ் செய்ததனுல் எம் முன்னேரனைவரும், மானரெக்ஷணர்த்தம் மரண மடைந்துவிட்டார்கள்; ஆதலால், எங்கள் குலத்தில் பெண்களேயில்லை, பிரமசாரிகளாயிருக்கிற நாங்கள் எப்படி மகுடஞ்சூட்டலாம் என்று சொன்னுர்கள்.

பின்புஅரசன் வைசியகுருவாகிய ஈசான்யசிவாசாரியனையும், மற்றப்பெரியோர்களையும் வரவழைத்துக் கேட்க; அவர்கள் "தருமசாத்திரத்தில் பிரமகுலத்தார் க்ஷத்திரியகுலத்திலும், க்ஷத்திரியகுலத்தார் வைசியகுலத்திலும், வைசியகுலத்தார், வேளாளர்குலத்திலும் பெண்களை விவாகம் செய்துகொள்ளலாமென்று விதியிருக்கிறது" என்று சொல்லப் பின்பு அரசன் வேளாளர்களையும் அவர்களுடைய ஆதீனகுருமார்களையும் வரவழைத்து இந்தவிஷயத்தை விவரித்துச்சொல்லிப்பெண்கேட்க, அப்போது வேளாளர் "எப்பொழுதும் சம்பந்தம் கொள்ளக் கொடுக்க இருப்பதாயிருந்தால் பெண் கொடுக்கிறேம்" என்றுசொல்ல வைசியகுமாரர்கள் "நாங்கள்

பெண்ணைக் கொள்ளலாமே யல்லது கொடுக்கலா காது" என்றுசொல்ல, அரசனும், ஆதீனகுருமார் களுங் கேட்டு இது கிரமந்தானென்று அப்படியே - வேளாளர்களையினக்க, அவர்களும் பெண்கொடுக் கச் சம்மதித்துப் பெண்கள் எங்கள் ஆதீனகுருமா ர்களிடத்தில் தீட்சாகிரிவை முதலானவைகள் செய் துகொள்ளவேண்டுமென்று கேட்டதற்கு அவ்வித மே தீர்வைசெய்துவிட்டார்கள்.

பின்பு கார்காத்த வேளாளர் பெண்களை மேல த்தெரு ஆறுவழி அறுநாறுபிள்ளைகளுக்கும் விவா கஞ்செய்து அந்தப்பெண்களுக்குத்திருவாரூர்த்திரு நாவுக்கரசுக்குருக்களைத் தீட்சாகுருவாகவும், காணி யாளவேளாளர் பெண்களைத் தெற்குத்தெரு நான்கு வழி நானூறுபிள்ளைகளுக்கும் விவாகஞ்செய்து அந் தப்பெண்களுக்குக் கும்பகோணம் சிவஞானகுருக் களைத்தீட்சாகுருவாகவும்,சோழியவேளாளர் பெண் களைக் கிழக்தெரு ஏழுவழி,ஐந்நூற்றிரண்டு பிள்ளை களுக்கும் விவாகஞ்செய்து அந்தப் பெண்களுக்கு ஸ்ரீவாஞ்சியம் கிரம்பவழகியகுருக்களைத் தீட்சாகுரு வாகவும் நியமனஞ்செய்துகொண்டு, அந்த வைசியர் எல்லாரும், ராசபூஷணசோழராசனுக்கு மகுடஞ்சூ ட்டிச் சகலமன்னிணை மரியாதையும்பெற்றுப் பின்பு வேளாளர் சீதனச்சீர்வரிசைகள் செய்கிறதென்றும். பெண்களுக்கு வேலைசெய்ய வெள்ளாட்டிகள் வைக் கிறதென்றும், பெண்வழியாகிய வேளாளக்குலத்து மாமனுக்குச் சடங்குப்பாத்திய மில்லையென்றும்,

பின்பு உபயகுலசம்பந்தமாயுண்டாகும் இரண்டுவழி மாமன்மார்களுக்கும் சடங்குப்பாத்தியம் உண்டென்றும், இவர்களையன்றி நன்மை தீமைகள் செய்கிறதில்லையென்றும், வாக்குறுதி செய்துகொண்டு, உபயகுலபூபாலவைசியர்களென்றும், இரத்தின தனமகுட பூபாலவைசியர்களென்றும், கெங்காகுல வேளாளப்பெண்களை விவாகஞ் செய்துகொண்டதால் சந்திர கங்காகுல வைசியர்களென்றும், இராசசபையிலே பேர்பெற்றுச் சைவசமய சிவதரும சிவாகமபுராணவிபூதிருத்திராட்ச பஞ்சாக்ஷரமகாமந்திர சித்தாந்த யோகபாக்கிய சம்பன்னர்களாயிருந்தார்கள்.

பின்பு சாலிவாகன சகாப்தம் ௬௱௨௰௨, கலியுகவருஷம் ௩௲௭௱௪௰௧-ல் வைசியர்களுக்கும், வேளாளர்களுக்கும், குருப்பிரசாத விபூதிமுதலியவை வாங்குகிறதில் முன்பின்னென்று வழக்கு வந்ததினாலே பெண்களுக்கும், வேளாளர்களுக்கும் ஒரு குருவாயிருத்தல்பற்றி இப்படிநேர்ந்தது! எங்களுக்கு வேறு குருஸ்தானம் நியமித்துக்கொடுக்கவேண்டுமென்று உபயகுருக்களாகிய மூன்று குருஸ்தானங்களிலும் வைசியர்கள்வணங்கிக் கேட்டுக்கொள்ள, அவர்களும் சம்மதித்துத் தங்கள்தங்கள் கனிஷ்டர்களை வைசியப்பெண்களுக்குக் குருக்களாக நியமித்துத் திட்சாகிரியை முதலியவை நடத்திவரச்செய்தார்கள்.

அப்போது பாண்டிய தேசாதிபதியாயிருந்த சவுந்தரபாண்டியன் சோழதேசத்துக்குச் சென்று

அந்தத்தேசாதிபதியாகிய ராசபூஷண சோழராசனை க்கண்டு 'எங்கள் தேசத்திலே முன்பு கீர்த்திபூஷண பாண்டியராசன்காலத்தில் கடல்பெருகித் திருப்பூவ ணம்வரை அழிந்துபோன தினால் அதற்குப்பின் பதி னெட்டுப் பாண்டியர்கள் அரசாட்சி காலம்வரை, நற் குடிகளில்லா திருந்து இப்போது நற்குடிகள் வரவ ழைக்கப்பட்டுச் சுபிக்ஷமாயிருக்கிறது இன்னும்சில நற்குடிகளும், வியாபார வைசியர்களும் தரவேண்டு மென்றுகேட்டுக்கொள்ளச் சோழராசன் அப்படியே தருகிறோமென்று சொல்லிச் சிலநற்குடிகளையுங்கொ டுத்துக் காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள இரத்தினத னமகுடபூபால வைசியர்களை வரவழைத்து "நீங்கள் சிலர்பாண்டியதேசத்துக்குப்போயிருங்கள்" என்று சொல்ல, வைசியர்கள், "நாங்கள்மூன்றுதெருவாரும் எங்கிருந்தாலும் ஒருமித்திருக்கிறதேயல்லது சிலர் இங்கும் சிலர் அங்குமாய்ப்பிரிந்திருக்கமாட்டோம்" என்றார்கள், அதுகேட்டு, அரசன் அவ்வாறே மூன் றுதெருவைசியர்களையும் சேர்ந்தே போயிருக்கும் படி சொல்ல வைசியர்கள் அரசனைநோக்கித் தாங் கள் எங்களுக்கு நடத்திவந்தபடி மன்னிணை மரியா தை தந்து அபிமானமாய்ச் சம்ரக்ஷணை செய்வதா ய்த் தங்கள் முன்னிலையில், பாண்டியராசர் உறுதி யான வாக்களித்தால் அங்ஙனமே போயிருக்கி றோம்" என்று சொன்னார்கள்.

அப்பொழுது பாண்டியராசன் சோழராசனை நோக்கி உங்களிலும் அதிக மரியாதையாய்நடத்து

கிறேன் என்று பிரமாணமாகச் சொல்ல வைசியர்கள் பாண்டியராசனை நோக்கி எங்களுக்குச் சேர்க்கையாய்க் குடியிருக்குமிடமும் தேவாலயங்களும் நாங்கள் கூட அழைத்துவருகிற குருமார்களுக்கு மடாலயங்களும் க்ஷேத்திர சுவாத்தியங்களும் விட்டு அவைகளை நாங்களே பரிபாலித்து வரும்படி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப் பாண்டியராசனும் அதற்கு உடன்பட்டுச் சகல மரியாதையும் செய்து ராசபூஷண சோழராசனிடம் விடைபெற்றுத் தன்னோடுகூட அந்த வைசியரை அழைத்துக்கொண்டு சாலிவாகன சகாப்தம் ௬௱உ௰௬-கலியுகவருஷம் ௩௲௮௱௮-ல் நிகழ்ந்த பிலவங்க ஸ்ரீ வைகாசிமீ ௨௰௯ உ சுக்கிரவாரமும் அஸ்தநக்ஷத்திரமுங்கூடிய சுபதினத்தில் பாண்டியராசன் தன்னாட்டிலுள்ள ஒங்காரக்குடி என்னும் ஊர் வந்து சேர்ந்தான்.

அப்போது சவுந்தரபாண்டியராசன் தான் முன்பு வாக்களித்தபடியே வைசியர்களை நோக்கிக் கடலுக்கு மேற்கு வைகைக்கு வடக்கு பிரான்மலைக்குக் கிழக்கு வெள்ளாற்றிற்குத் தெற்கு இந்நான் கெல்லைக்குட்பட்ட இந்த நாடு வேளாளர் பூமியாயிருப்பதினால் நீங்கள் மூவகையாரும் இங்கே குடியேறி வசித்திருங்களென்று சொல்லி அரியூர் நகரமும் பிரான்மலைக் கோவிலும், சுந்தரபட்டணமும் அவ்வூர்க் கோவிலும், சோப சாந்தி புரமாகிய இளையாற்றக்குடி நகரமும் அவ்வூர்க் கோவிலும்,

க்ஷேத்திர சுவாத்தியங்களும் விட்டுக்கொடுத்துக் கூட அழைத்துவந்தகுருஸ்தானங்களுக்கும் க்ஷேத்திர சுவாத்தியங்களும் விட்டு, மரியாதையுஞ்செய்து சுகசீவிகளாயிருக்கும்படி கட்டளையிட்டுப் பாண்டிய ராசன் மதுரைமாநகரஞ் சேர்ந்தான்.

பின்பு வைசியர்கள் தாங்கள் மூன்று வகுப்பாயுள்ள வேளாளர்குலத்தில் கலியாணஞ்செய்திருத்தலால் எப்பொழுதும் ஒற்றுமையாயிருப்பது முடியாதென்று மேலத்தெரு ஆறுவழியாருக்கு அரியூர் நகரமும் பிரான்மலைக் கோவிலும் தெற்குத்தெரு நான்குவழியாருக்குச் சுந்தரபட்டணமும் அவ்வூர்க் கோவிலும் கீழத்தெரு ஏழுவழியாருக்கு இளையாற்றக்குடி நகரமும் அவ்வூர்க் கோவிலும் உரிமையுள்ளவைகளாகப் பகுத்துக்கொண்டு மூவகையார்க்கும் பொதுவாயுள்ள மரகதவிநாயகரை அரியூர் மேலத்தெருவில் கோவிலுண்டாக்கிவைத்துப் பூசை செய்துவருகிறதென்றும் அதற்கு நித்திய நைமித்திகபூசை திருப்பணிமுதலியவை மூவருக்கும் பொதுவில் நடத்துகிறதென்றும் மூன்று வகையாரும் ஈசான்யசிவாசாரியார் திருமுகப்படி பாண்டிநாட்டாசாரியரிடத்துத் தீட்சாகிரியை முதலானவை தங்கள் தங்களுக்கு இஷ்டமானகாலத்தில் பெற்றுக்கொள்ளுகிறதென்றும் பேசித் தீர்வைசெய்துகொண்டார்கள்.

பாண்டியதேசம் வந்தபிறகு ஆறுவழியார் அரியூரில் நிலைமைபெற்றிருந்ததால் அவர்களுக்கு அரி

யூராரென்றும், நாலுவழியார் சுந்தரபட்டணத்தில் நிலைமைபெற்றிருந்ததால் அவர்களுக்குச்சுந்தரத்தாரென்றும் ஏழுவழியார் இளையாற்றக்குடி நகரத்தில் நிலைமைபெற்றிருந்ததால் அவர்களுக்கு இளையாற்றக்குடி நகரத்தாரென்றும் பெயர்வந்தன. அவற்றுள் இளையாற்றக்குடிநகரம் நாட்டுக்குள் கோட்டைபோல் நடுமண்டலமாதலால் இளையாற்றக்குடி நகரத்தாராகிய ஏழுவழி நகரத்தாருக்கு மட்டும் நாட்டுக்கோட்டைநகரத்தார் என்று பெயர்வந்தது.

ஒவ்வொரு வகுப்பிலும் நேரிடுகிற விவகாரங்களை அவ்வவ் வகுப்பாரே விசாரித்துத் தீர்வைசெய்கிறதென்றும், மாதா, பிதா, குரு, தெய்வம், வைதிகர், முதலிய பெரியோர்களுக்குமட்டும் வந்தனை வழிபாடு செய்கிறதென்றும், அரசர்களையும், உத்தியோகத்திலிருக்கிற பிராமணர்களையும், மற்ற எவரையும் வணங்குகிறதில்லையென்றும், மூன்று பிரிவாரும் பேசி முடிவுசெய்தார்கள். சவுந்திரபாண்டியராசனும் இவர்களுக்குக் கொடுந்தண்டனைகள் விதிக்கிறதில்லையென று, உறுதிகூறி ஆணையளித்தான்

இவ்வாறு, நெறிவழுவாமல் ஏழுவழி இளையாற்றக்குடி நாட்டுக்கோட்டை நகரத்தார் ஒருமித்து இளையாற்றக்குடியில் வாழுநாளில்; பின்பு தங்களுள் ஒற்றுமைப்படாமல், சிலர்தவிர மற்றையோரெல்லாரும் எண்வகையான கூட்டத்தாராகித் தங்தங்கள் தங்களுக்கு வெவ்வேறு கோவில்கள் விட்டுக்

கொடுக்கவேண்டுமென்று பாண்டியராசனைக் கேட்டுக்கொள்ள, அதற்கிணங்கிச் சாலிவாகன சகாப்தம் சூாஙயச—கலியுக வருஷம் ஙதூஅாயஙு-ல், ஓர் வகைக்கூட்டத்தாருக்குக், கேரளசிங்கவளநாட்டில் திரிபுவனசக்கரவர்த்தி பிரதிஷ்டைசெய்த க்ஷேத்திரமாகிய அதிவீரபாண்டியபுரமென்னும் மாற்றூர்க்கோவிலும், மற்றொருவகைக் கூட்டத்தாருக்கு வளவேந்திரராசன் பிரதிஷ்டைசெய்த க்ஷேத்திரமாகிய வைரவன்பட்டிக்கோவிலும், சாலிவாகன சகாப்தம் சூாஙயசூ—கலியுகவருஷம் ஙதுஅாயடு-ல் மற்றொருகூட்டத்தாருக்குக், காருண்யபாண்டியராசன் பிரதிஷ்டைசெய்த க்ஷேத்திரமாகிய சொர்னபுரமென்கிற இரணியூர்க்கோவிலும், மற்றொருகூட்டத்தாருக்கு நேமநாட்டில் நந்திராசன் பிரதிஷ்டைசெய்த க்ஷேத்திரமாகிய நந்திபுரமென்னும் பிள்ளையார்பட்டிக் கோவிலும், மற்றொருகூட்டத்தாருக்கு நேமநாட்டில் நேமராசன் பிரதிஷ்டைசெய்தக்ஷேத்திரமாகிய மதுநந்திபுரமென்னும் நேமம் கோவிலும் மற்றொருகூட்டத்தாருக்குத் திரிபுவனசக்கரவர்த்தி பிரதிஷ்டைசெய்த க்ஷேத்திரமாகிய அதிவீரபாண்டியபுரமென்றும், பிரமபுரமென்றும் வழங்குகிற இலுப்பைக்குடிக்கோவிலும், சாலிவாகன சகாப்தம் சூாசய—கலியுகவருஷம் ஙதூஅாயகூ-ல் மற்றொரு கூட்டத்தாருக்குப் பெதரிகாபுரமாகிய சூரைக்குடிக் கோவிலும், மற்றொரு கூட்டத்தாருக்குக் கெந்தகாபுரியாகிய வேலங்குடிக்கோவிலும், அவைகளுக்குத் தனித்தனியே க்ஷேத்திரசுவாத்தியங்களும்

அரசன் விட்டுக்கொடுத்தான். மேற்குறித்தபடி அரசனிடத்திற்கு வாராதிருந்தவர்கள் இளையாற்றக்குடிக்கோவிலையும், அதற்குரிய க்ஷேத்திரசுவாத்தியங்களையும் தங்களுக்கு வைத்துக் கொண்டார்கள்.

இவ்வாறு ஒன்பது கோவில்களையும், க்ஷேத்திரசுவாத்தியங்களையும் அவரவரும் தனித்தனியே யுரிமைபாராட்டி அனுபவித்துவருகிறநாளில். சாலிவாகன சகாப்தம் ௲அ௰௩—கலியுகவருஷம் சதூ௨௱௬௰௨-ல், பூங்கொன்றைநாட்டு வேலங்குடியில், மாணிக்கப் பெருந்தெருவில், வசித்துக்கொண்டிருந்த, நேமங்கோவிலைச்சேர்ந்த இளநலமுடையான் முத்துவீரப்பசெட்டிகுமாரனாகிய அருணசலமென்பவனுடையபுத்திரி ஐந்துவயதுள்ள முத்துமீனாட்சி என்பவளைக்காருண்யபாண்டியராசன் வேட்டைக்கு வந்தகாலத்தில் நகர்ப்புறத்திற்கண்டு எடுத்துத்தன் வாகனத்தில் ஏற்றிக்கொண்டு தனது நகரத்துக்குப் போய்ச்சேர்ந்தான்.

பின்பு அதனையறிந்து ஒன்பதுகோவில் நகரத்தாரும் சேர்ந்து கூட்டங்கூடிச்சிறையெடுக்கப்பட்ட பெண்ணுக்குச் சாதிவியாயத்தில் ஏற்பட்டிருக்கிற முடிவான முறையைச் செய்வதாகப் பேசிமுடித்துக் கொண்டு, பாண்டியராசனிடத்திற்குச் சென்று அப் பெண்ணை விடும்படி கேட்க, அவர்களைப்பார்த்து "உங்கள் பெண்ணென்று தெரிந்தால் எடுத்துவந்திருக்கமாட்டேன், அப்பெண்ணை விட்டால் கொலை

செய்துவிடுவீர்களென்று பலருஞ் சொல்லுகிறார்கள், ஆயினும் நீங்கள் கேட்டுக்கொள்வதற்காகப் பெண்ணைத் தரச் சம்மதிக்கின்றேன், அப்பெண்ணை நீங்கள் கொன்றதாகத் தெரிந்தால் அந்த ஒரு தலைக்கு எட்டுத்தலையும், என்ணுயிரம் பொன்னும் உங்களிடத்து வாங்குவோம்" என்று சொல்லி அப்பெண்ணை அவர்களிடம் கொடுத்தான்.

அவர்கள் அரசன்பால் விடைபெற்றுக்கொண்டு வரும்வழியிலே அப்பெண்ணைச் சாதிநியாய முறைப்படி செய்துவிட்டு ஊருக்கு வந்து ஓரிடத்திற்கூடி அரசன் ஆக்கினைப்படி எட்டுத்தலை அனுப்புவதற்கு எழுவழிக்கும் எழுதலை கொடுக்கலாம்; பின்னும் ஒருதலை வேண்டுமே அதற்கு என் செய்வது? என்று ஆலோசித்துக்கொண்டிருக்கையில் எழுவழியாரில் ஒருவழியாராகிய இளையாற்றக்குடி, இரணியூர், பிள்ளையார்பட்டி என்று சொல்லப்படுகிற மூன்று கோவிலாரும் சேர்ந்து "எங்கள் வழி ஒன்றாயிருந்தாலும், கோவில் மூன்று யிருக்கிறதால் நாங்கள்தான் ஒருதலைவியனுகத் தரவேண்டும்" என்று சொல்ல அப்போது இளையாற்றக்குடிக்கோவிலில் ஒரு பிரிவாராகிய ஒக்கூருடையார் எழுந்து வியனுகக்கொடுக்கவேண்டிய ஒருதலையையும் நாங்கள் கொடுக்கிறோம்; மானம் பெரிதேயன்றிப் பிராணன் பெரிதில்லை; கோவில், குருஸ்தானங்களில் விபூதி முதலான சகல மரியாதையும் முதலிலே எங்களுக்குச் செய்வதாப் நகரத்தார் எல்லாரும்

ஒப்புக்கொண்டால் அதுவே எங்களுக்குப் போது மென்று சொல்ல அவ்வாறே நகரத்தாரும் சம்மதித்துப் பின்பு எல்லாரும் அரசனையடைந்து ஆக்கினைப்படி எட்டுத்தலையும் எண்ணாயிரம் பொன்னும் கொண்டுவந்திருக்கிறோம், என்று சொன்னார்கள். அதுகேட்டு அரசன் மிகத்துன்பமுற்று அவர்களை நோக்கி, "ஒரு பெண்பழிபோதும் நீங்கள் ஒன்றுந் தரவேண்டாம், போய்வாருங்கள்" என்றுசொல்ல நகரத்தார் திரும்பித் தம்மூர் வந்துசேர்ந்தார்கள்.

அந்தப் பெண்பழி நிவர்த்தியின் பொருட்டு உருத்திரபதீசுவரருக்குத் திருப்பணிசெய்து தடாகம் உண்டாக்கித் திருவிழாவும் நடத்தி அந்தத்தருமம் எக்காலமும் நடக்கும்படி க்ஷேத்திர சுவாத்தியங்களும்வாங்கிவிட்டு, இனிஇந்தவூரில் குடியிருக்கலாகாதென்று அவ்வூரைவிட்டு அவர்கள் எல்லாரும் மாற்றூர் முதலிய இடங்களில் வந்து குடியிருப்பு நிலைமை ஏற்படுத்திக்கொண்டார்கள் அது நிற்க:

இப்பால் சாலிவாகனசகாப்தம் ௲௨௱௰-கலியுகவருஷம் ௪௲௩௱௮௰௯—சருவதாரி வருஷத்தில் நடந்த கலகத்தில் அரியூர்ப்பட்டணம் எடுபட்டுப் போனதினால் அந்த வூரில் இருந்த மேலைத்தெருவாராகிய அறுபத்துநான்கு வைசியர்கள் திசை தப்பி மலையாளம் போய்ச்சேர்ந்து கோட்டாற்றங்கரையில் குடியிருப்பு நிலைமைபெற்று மரகதவிநாயகருக்குக் கோவிலும் கட்டி, நித்திய நைமித்திக பூசை முதலியவைகளும் நடத்திவருகிறார்கள்.

ஏழுவழி நகரத்தார் சாலிவாகன சகாப்தம் தூசாகூ௰டு—கலியுகவருஷம் சதுசூாசய௰௲-ல் நாட்டரசன்கோட்டையில் குடியிருக்கையில் கொள்ளைக் கலகம் நடந்ததில் சில பெண்கள் கற்பு அழிந்து போனதினுல் நகரத்தார் கூடிக் குருஸ்தானங்களிடம்போய்க் "கலகத்தினுல் எங்கள் பெண்களிற் சிலருக்குக் கற்புப்பழுது வந்துவிட்டது; அவர்களை நகரமுறைமைப்படி செய்வதற்கு அநுமதிதரவேண்டும்" என்று கேட்டார்கள், அப்போது உபய குருஸ்தானங்களும் கூடி யோசித்து, அறிந்துசெய்தால் தான் குற்றம் இது அபுத்திபூர்வமாக நேர்ந்திருப்பதால் குற்றமில்லை; இப்படியே தருமசாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கிறதென்றும், ஆதலால் இதற்குத் தெண்டனை செய்யக்கூடாதென்றும், சொன்னதற்கு, நகரத்தார் இனிமேல் அப் பெண்களை வைத்திருந்தால் மானபங்கம் உண்டாகுமென்றும், தண்டிக்கும்படி ஆக்கினை கொடுக்க வேண்டுமென்றும் கேட்க, அப்பால் தாக்ஷணியத்தினுல் தெண்டிக்கும்படி உத்திரவுசெய்துவிட்டு, இரண்டு குருஸ்தானங்களும் காசிக்குக் கெங்காஸ்நானத்தின்பொருட்டுப் போய்விட்டார்கள், நிரம்பவழகிய குருக்களவர்கள் மட்டும் அங்கிருந்து மூன்ருவது வருஷத்தில் துளாவூருக்கு வந்துசேர்ந்தார்கள், பாண்டிநாட்டுக்குருக்களவர்கள் ௰உ-வருஷம் வரையும் வராமையால் ஒன்பது கோவில் நகரத்தாரில் சிலர் வேறு குருஸ்தானம் நியமித்துக்கொள்ளவேண்டுமென்று யோசித்துத் திருப்புனவாயிலில் வேறு செட்டிகளுக்கும்

வேளாளருக்குங் குருவாயிருக்கிற குருஸ்தானத்தை யடைந்து தீட்சை உபதேசம் முதலியன பெற்றுக் கொண்டார்கள் மற்றைய சிலர் இன்னும் சிலகாலம் பார்த்துக்கொள்வோமென்று வேறு குருவை நியமித்துக்கொள்ளாமலிருந்தார்கள்.

பின்பு, இருபத்தொரு வருஷத்திற்கு மேல் சாலிவாகன சகாப்தம் ௲௭௱௮௰௬—கலியுக வருஷம் ச௲௯௱௬௰௫ ல் முன்பு காசிக்குப்போயிருந்த பாண்டிநாட்டுக்குருக்களவர்களும் களாமடத்துக்கு வந்துவிட்டார்கள். உடனே எல்லோரும் பயந்து யோசித்து, ஒருவாறு தேறித் திருப்புனவாயிலுக்குப் போய் நூதன குருஸ்தானமாகிய இராமநாத சுவாமியாரை அழைத்துக்கொண்டுவந்து, அவர்களுடன் நகரத்தாரெல்லாரும் பாண்டிநாட்டாசாரியரிடம்போய் "நெடுங்காலமாக நீங்கள் வாராமையாலே எங்களில் சிலர் இந்தக் குருக்களிடத்தில் தீட்சை செய்துகொண்டார்கள், எப்படி அநுக்கிரகஞ்செய்தாலும் அப்படி நடந்துகொள்ளுகிறோம்" என்று வணங்கி விண்ணப்பஞ்செய்ய; அதுகேட்டுப் பாண்டிநாட்டாசாரியாரும், இவரிடத்தில் உங்களில் எத்தனை பேர்கள் தீக்ஷை செய்து கொண்டீர்களோ அத்தனை பேர்களும் வம்சபரம்பரையாக இவர் பரம்பரையிலேயே தீக்ஷை முதலியவை பெற்றுக்கொள்ளுங்கள்" என்று அநுமதிகொடுக்க; அப்படியே செய்கிறோமென்று சொல்லி, இவர்களுக்கு மடமும் க்ஷேத்திரசுவாத்தியமும் கொடுக்கவேண்டுமென்று

கேட்டுக்கொள்ள, சாலிவாகன சகாப்தம் ௲சா அமள—கலியுகவருஷம் ௪௲௯௱௯௰௯-ல் செல்லா நின்ற அக்ஷயவருஷ ஐப்பசிமீ ௨௨ விஷுபுண்ணிய காலமும், சோமவாரமும், திருவோண நட்சத்திர மும், சுக்கிலபக்ஷ சப்தமியும் கூடிய சுபதினத்தில் சந்திர கெங்காகுலமாகிய ரத்தினதனமகுட பூபால வைசியரில், முன்பு தீட்சைபெற்றுக்கொண்ட குடி களை விட்டுக்கொடுத்ததுடன் கனகபுரமாகிய இல் லஞ்சேரிப்பட்டணத்தில் மடாலயமும், க்ஷேத்திர சுவாத்தியமும் கொடுத்தார்கள்.

அதுமுதல், புருஷர்களுக்குக் களாமடமும், இல்லஞ்சேரிப் பட்டணமாகிய பாதரக்குடிமடமும் என்ற இரண்டுமடமும், பெண்டுகளுக்குத் துளா வூர்மடமும் ஆக மூன்று குருஸ்தானங்களிருந்து விளங்குகின்றன.

இந்த வைசியர்கள் சைவதீக்ஷையுடையவர்க ளாதலால் சிகையில்லை.

ஆதியில் அநுட்டித்துவந்தபடி,
பூங்கொன்றை வேலங்குடியில் நகரத்தார்,
கிரணயஞ்செய்த,

சாதிமுன்ற நியாயங்கள்.

—*—

விவரம்.

மாதா பிதா குரு தெய்வம் பிராமணர் குலதே வதை இவர்களை வணங்கிப் பூசிக்கிறது.

கோவில்களுக்கும் குருஸ்தானங்களுக்கும் உள்ள கிராமம் முதலியவற்றை நகரத்தார் விசாரணையில் வைத்துக்கொண்டு அவைகளில் வரும் ஊதியத்தை அந்த அந்தத் தருமங்களுக்கே உபயோகப்படுத்துகிறது.

சாதிமுறைநியாயங்களில் தவறிநடக்கிறதில்லை நற்கருமங்களைச் செய்கிறது.

புருஷர்களும் பெண்டுகளும் தங்கள் தங்களுக்கு ஏற்பட்டிருக்கிற குருஸ்தானங்களிலேயே தீக்ஷாசாகிரியை முதலியவைகள் வழக்கப்படி செய்து கொள்ளுகிறது.

வேறொருவரிடத்தும் தீக்ஷாகிரியை முதலியவை செய்து கொள்ளக்கூடாது.

சிவமதத்திலேயே யிருக்கிறது. அன்னிய மதங்களில் சேரக்கூடாது.

ஏக கோத்திரத்தில் விவாகஞ் செய்துகொள்ளுகிறதில்லை. (கோத்திரமென்றது—கோவில்களும், உள் பிரிவுகளும்) சுயகோத்திரத்தில் புத்திரசுவீகாரம் செய்துகொள்ளுகிறது.

விவாகங்களில் மாப்பிள்ளைதொட்டுக்கொடுக்க நம்மவர்களில் ஒரு பெரியோர் வாழ்த்தித் திருமங்கிலியம் பூட்டுகிறது.

இரத்தினம், சுவர்னம், பலசரக்கு முதலிய வியாபாரங்கள் செய்கிறது.

சிவவதையான வியாபாரங்கள் செய்கிறதில்லை, சத்திய சற்சனர்களிடத்தில் பணம் கொடுக்கல் வாங்கல் செய்கிறது.

தரும வட்டி வாங்குகிறது. குதிரைவியாபாரமும், வெற்றிலை முதலிய அழுகற்சரக்கு வியாபாரமும் செய்யக்கூடாது.

குடிவாரத்திற்கு உழுது பயிரிடுகிறதில்லை. ஊரில் அம்பல உம்பள முதலிய உத்தியோக வேலைகள் பார்க்கக்கூடாது.

திருட்டுவியாபாரஞ் செய்யக்கூடாது. பிறன் மனைவியைச் சேரக்கூடாது. தாசிகளிடத்தில் கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடாது.

நகரமுறைமை தவறினவர்களையும், ராசதெண்டனைக்குட்பட்டவர்களையும், சோரஞ்செய்தவர்களையும் சேரக்கூடாது.

கடலுக்கு மேற்கு, பிரான்மலைக்குக் கிழக்கு, வைகைக்கு வடக்கு, வெள்ளாற்றிற்குத் தெற்கு இந் நான்கெல்லைக்குட்பட்ட வேளாளர் பூமியாகிய இந்த நாட்டிலேயே குடியிருக்கிறது.

வேறிடங்களில் குடும்பத்தோடுபோய்க் குடியிருத்தல் கூடாது.

பெண்டுகள் சுவாமிதெரிசனம் தீர்த்தயாத்திரைகளுக்குப் புருஷர்களோடு போய்வரவேண்டும்.

இதரகாரியநிமித்தம் அன்னிய தேசங்களுக்குப் பெண்டுகள் போகிறதில்லை.

எந்த விஷயங்களிலும் முன் வழக்கப்படி நடந்து கொள்கிறது.

நகரக்கூட்டம் கோவில்வாசலிலாவது மடத்து வாசலிலாவது கூடிச் சாதிநியாயம் பேசுகிறது.

மேற்கண்ட ஒன்பதுகோவில்நகரத்தாருக்கும் அவரவர்களுக்கு உரிய கோவில்களிலிருந்து சுவாமிக்குச் சாத்தின மாலையும், விபூதிப்பிரசாதமும் வந்துதான் கலியாணம் நடத்தல்வேண்டும்.

கலியாணம் நடக்கிற விவரத்தைப்பற்றிக் கோவில் வாசல்களில் தாம்பூலம் வைத்து முன்னமே தெரிவித்தல்வேண்டும்.

இரணியூர்க்கோவிலாரும், பிள்ளையார்பட்டிக் கோவிலாரும் சகோதரர்களின் வமிசத்தாராதலால் தம்முள் கலியாணஞ்செய்துகொள்ளக்கூடாது, மற்றைய கோவில்களில் செய்துகொள்ளலாம்.

இந்தப்படி இந்தச் சரித்திரம் பூங்கொன்றை வேலங்குடிக் கோவிலில் கல்வெட்டிலிருக்கிறது.

ஒன்பது கோவில்களும், பிரிவுகளும்.

விவரம்.

இளையாற்றக்குடிக்கோவில்.

சுவாமிபெயர்..............கைலாசநாதர்.
அம்மைபெயர்..............நித்தியகல்யாணி.

பிரிவுகள்.

(க) கல்வாசனாட்டில் இளையாற்றக்குடியான,
குலசேகரபுரத்தில்,
ஒக்கூருடையார்.

(உ) கல்வாசனாட்டில் இளையாற்றக்குடியான,
குலசேகரபுரத்தில், அரும்பாற்கிளையாரான,
பட்டணசாமியார்.

(ந) கல்வாசனாட்டில் இளையாற்றக்குடியான,
குலசேகரபுரத்தில்,
பெருமருதூருடையார்.

(ச) கல்வாசனாட்டில் இளையாற்றக்குடியான,
குலசேகரபுரத்தில்,
கழனிவாசக்குடியார்.

(ரு) கல்வாசனாட்டில் இளையாற்றக்குடியான,
குலசேகரபுரத்தில்,
கிங்கிணிக்கூருடையார்.

(சா) கல்வாசனாட்டில் இளையாற்றக்குடியான,
குலசேகரபுரத்தில்,
பேரசெந்தூருடையார்.

(எ) கல்வாசனாட்டில் இளையாற்றக்குடியான,
குலசேகரபுரத்தில்,
சிறுசேத்தூருடையார்,

மாற்றூர்க்கோவில்.

சுவாமிபெயர்.........ஐந்நூற்றீசர்.
அம்மைபெயர்.........பெரியநாயகி.

பிரிவுகள்.

(க) கேரளசிங்கவளநாடாகிய பிரம்பூர்நாட்டில்,
மாற்றூரான வீரபாண்டியபுரத்தில்,
உறையூருடையார்.

(உ) கேரளசிங்கவளநாடாகிய பிரம்பூர்நாட்டில்,
மாற்றூரான வீரபாண்டியபுரத்தில்,
அரும்பாக்கூருடையார்.

(ங) கேரளசிங்கவளநாடாகிய பிரம்பூர்நாட்டில்,
மாற்றூரான வீரபாண்டியபுரத்தில்,
மணலூருடையார்.

(ச) கேரளசிங்கவளநாடாகிய பிரம்பூர்நாட்டில்,
மாற்றூரான வீரபாண்டியபுரத்தில்,
மண்ணூருடையார்.

(ரு) கேரளசிங்கவளநாடாகிய பிரம்பூர்நாட்டில்,
மாற்றூரான வீரபாண்டியபுரத்தில்,
கண்ணூருடையார்.

(சு) கேரளசிங்கவளநாடாகிய பிரம்பூர்நாட்டில்,
மாற்றூரான வீரபாண்டியபுரத்தில்,
கருப்பூருடையார்.

(எ) கேரளசிங்கவளநாடாகிய பிரம்பூர்நாட்டில்,
மாற்றூரான வீரபாண்டியபுரத்தில்,
குளத்தூருடையார்.

வைரவன்கோவில்.

சுவாமிபெயர்.........வளரொளிநாதர்.
அம்மைபெயர்........வடிவுடையம்மை.

பிரிவுகள்.

(க) கேரளசிங்கவளநாடாகிய ஏழகப்பெருந்திருவான, வீரபாண்டியபுரத்தில்,
சிறுகுளத்தூருடையார்.

இதில் உள்பிரிவுகள்.

(க) பெரியவகுப்பு.
(உ) தெய்யனூர்வகுப்பு:(தெய்வநாயகர்வகுப்பு)
(ங) பிள்ளையார்வகுப்பு.

(உ) கேரளசிங்கவளநாடாகிய ஏழகப் பெருந்திருவான, வீரபாண்டியபுரத்தில்,
கழனிவாசலுடையார்.

(ங) கேரளசிங்கவளநாடாகிய ஏழகப்பெருந்திருவான, வீரபாண்டியபுரத்தில்,
மருதேந்திரபுரமுடையார்.

இரணியூர்க்கோவில்.

சுவாமிபெயர்........ஆட்கொண்டநாதர்.

அம்மைபெயர்.... ...சிவபுரந்தேவி.

(க) கல்வாசனாட்டில், இளையாற்றக்குடியான,
குலசேகரபுரத்தில், இரணியூர்,
மருதங்குடியான ராசநாராயணபுரத்தில்,
இரணியூர்த்திருவேட்பூருடையார்.

பிள்ளையார்பட்டிக்கோவில்.

விநாயகர்பெயர்.........கற்பகவிநாயகர்.
சுவாமிபெயர்...........திருவீசர்.
அம்மைபெயர்.........சிவகாமவல்லி.
சுவாமிபெயர்.... ...... மருதீசர்.
அம்மைபெயர்.........வாடாமலர்மங்கை.

(க) கல்வாசனாட்டில் இளையாற்றக்குடியான,
குலசேகரபுரத்தில், இரணியூர்,
மருதங்குடியான ராசநாராயணபுரத்தில்,
பிள்ளையார்பட்டியான திருவேட்பூருடையார்.

நேமங்கோவில்.

சுவாமிபெயர்.....செயங்கொண்டசோளேசர்.

அம்மைபெயர்.....சவுந்தரநாயகி.

(க) கேரளசிங்கவளநாட்டில் நேமமாகிய,
குலசேகரபுரத்தில், தேனாறுபாயும்,
இளநலமுடையார்.

இலுப்பைக்குடிக்கோவில்.

சுவாமிபெயர்........தான்றோன்றியீசர்.

அம்மைபெயர்........சவுந்தரநாயகி.

(க) கேரளசிங்கவளநாடாகிய பிரம்பூர்நாட்டில்.
இலுப்பைக்குடியான,
புகழிடங்கொடுத்தபட்டணத்தில்,
சூடாமணிபுரமுடையார்.

சூரைக்குடிக்கோவில்.

சுவாமிபெயர்........தேசிகநாதர்.

அம்மைபெயர்........ஆவுடையநாயகி.

(க) கேரளசிங்கவளநாட்டில் சூரைக்குடியான,
தேசிகநாராயணபுரத்தில்,
புகழ்வேண்டியபாக்கமுடையார்.

வேலங்குடிக்கோவில்.

சுவாமிபெயர்........கண்டீசுவரர்.

அம்மைபெயர்........காமாட்சியம்மை.

(க) கேரளசிங்கவளநாடாகிய பாலையூர்நாட்டில்,
வேலங்குடியான தேசிகநாராயணபுரத்தில்,
கழனிநல்லூருடையார்.

———(*)———

A. No. 24200

கல்யாணத்தில்.

இசைகுடிமானம் எழுதுகிறவிதம்.

ஹூ ஸ்ரீ உ கல்வாசனுட்டில் இளையாற்றக்குடியான குலசேகரபுரத்தில் ஒக்கூருடையான் அருணாசலஞ்செட்டி ராமநாதரோ, கேரளசிங்கவளநாடாகிய பிரம்பூர்நாட்டில் மாற்றூரான விரபாண்டியபுரத்தில் அரும்பாக்கூருடையான் கண்ணப்பசெட்டி நாராயணரோ இவர்மகன் சுப்பிரமணியனுக்கு இவர்மகள் வள்ளியம்மையைப் பாணிக்கிரகணம் பண்ணிக்கொண்டமைக்கு இவர் பூஷணம் பூட்டும் பொன் ஒன்பது ஆறுகல்லெடை, பொன் பதின்முக்கழஞ்சு,: இவர் சீதனம் கொடுக்கும் பொன் இம்மாறு இவ்வெடை, பொன் ஆறுகழஞ்சு வெள்ளி ஆறுகழஞ்சு, வெண்கலந்தராப்பலம் ஆறுபத்தொன்று, வெள்ளாட்டிக்குப்பணம் முப்பது, சிராட்டுச்சக்கரம் ஆறுபத்தொன்று, இவ்வகைப்படிசெய்வோம். இவர் நன்கொடை கொடுக்கும் பொன் ஐம்பது, மோதிரம் விராகனெடை மூன்று, இவர் உகந்துடைமையாய்க் கொடுக்கும் பொன் வளையி ஏழுகழஞ்சு, இவ்வகைப்படி செய்வோம். இந்தநாள் இவரிடும் பொன் இவர்சொற்படி தெரிசனை பதின்முக்கழஞ்சு, இவ்வகைப்படிசெய்வோம் இந்த இசைகுடிமானம் எழுதினேன் கல்வாசனுட்டில் இளையாற்றக்குடியான குலசேகரபுரத்தில் ஒக்கூருடையான்

......................................செட்டி கையெழுத்து.

முற்றிற்று,

வாழ்த்து விருத்தம்,

உலகெலாம்வாழி வாழி யொன்பதுநகரக்கோவில்
வலமுளபரமனம்மை மரகதவிநாயகன்சீர்
நலமிகுமுருகன்வாழி நாளுஞ்சந்தானம்பல்கி
மலர்மகளருள்பெற்றேழு வழிநகரத்தார்வாழி.